## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Civil Procedure)
## அசல் வழக்கு எண். 106/2025

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பெரும்புதூர் 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ம் நாள் வா.த.சா.1 (PW1) அவர்களுக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஹென்றி தாமஸ் | வயது | : | 53 |
| த/பெ. | | ஆரோக்கியசாமி | தொழில் | | வெல்டர் |
| கிராமம் | | பஞ்சமந்தாங்கல் | தாலுக்கா | | திருவள்ளூர் |

வா.த.சா.1 (PW) முதல் நிலை விசாரணை தொடர்ச்சி :

நான் இவ்வழக்கின் வாதியாவேன். வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். (சாட்சியின் அடையாளம் ஆதார் அடையாள அட்டையின் மூலம் உறுதி செய்யப்பட்டது.) என்னுடைய சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன்.

| வ. எண் | Exhibits | | தேதி | ஆவணங்கள் விவரம் | அசல்/நகல் |
|---|---|---|---|---|---|
| 1. | வா. த.சா.ஆ. 6 | Ex.A-6 | 30.03.1993 | அமல்ராஜ் என்பவரின் இறப்பு சான்றிதழ். | அசலுடன் ஒப்பிட்டு குறியீடு செய்யப்படுகிறது. |

**குறுக்கு விசாரணை**

1) நான் பிறப்பால் கிருத்துவ மதத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். இறந்து போன ரோஸ்மேரி எனது அம்மா வழி பாட்டி ஆவார். எனது அம்மாவுக்கு அவர் சித்தி முறை ஆவார். ரோஸ்மேரி என்பவர் 02.06,2024 ம் ஆண்டு இறந்துபோனார். ரோஸ்மேரியின் கணவர் அமல் ராஜ் ஆவார் அவர் 30. 03. 1998 ம் தேதி இறந்துவிட்டார். ரோஸ்மேரிக்கு குழந்தைகள் எதுவும் கிடையாது. ரோஸ்மேரியின் கணவர் அமல்ராஜ் என்பவருக்கு உடன்பிறந்தவர்கள் யாரும் கிடையாது. அமல்ராஜிக்கு உடன்பிறந்தவர்கள் யாரும் இல்லை என்ற விவரம் பற்றி நான் எனது வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல

2) ஆரோக்கிய மேரி என்பவர் ரோஸ் மேரியின் சகோதரி ஆவார். அவரும் எனக்கு பாட்டி முறை உறவு ஆவார். ஆரோக்கிய மேரி மற்றும் ரோஸ் மேரி ஆகியோர் எனக்கு பாட்டி என்பதற்கு இந்நீதிமன்றத்தில் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன ஆரோக்கிய மேரி மற்றும் ரோஸ் மேரி ஆகியோர்கள் சகோதிகள் என்பதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பாக்கியம்மாள் எனது

தாயார் என்பதற்கு நான் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்ன காரணத்திற்காக ரோஸ்மேரியின் வாரிசு நான் தான் என்று விளம்புகை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீட்டு பத்திரங்கள் எனது பெயருக்கு மாற்ற வேண்டி காரணம் ஆகும்.

3) நான் இறந்துபோன ரோஸ் மேரி என்பவருக்கு நேரடி வாரிசுதாரர் என்பதற்கு எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்தி வாரிசு உரிமை சட்டப்படி ரோஸ்மேரிக்கு நேரடி வாரிசுகள் இல்லாததால் அவரது சொத்துக்கள் அரசுக்கு தான் சொந்தம் என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**சாட்சி கையொப்பம் Sd/. ஹென்றி தாமஸ்.**

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. P. Jagadeeswaran.
District Munsif,
Sriperumbudur.